LIBRARY
16 AUG 1963
MADRAS LEGISLATURE

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 30th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : Questions 438, 443, 445, 448, 452 and 454 have been postponed since the concerned Hon. Minister is indisposed.

வரட்டாற்றில் அணைக்கட்டுதல் (தானிப்பாடி)

*439 கேள்வி—**திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தானிப்பாடியின் தென் பகுதியில் ஓடும் வறட்டாற்றில் புதிய அணை கட்டும் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

கனம் திரு. பூ. கக்கன் : இத்தகைய திட்டம் எதுவும் ஆலோசனையில் இல்லை.

திரு. ஏ. ஆறுமுகம் : இந்த வறட்டாற்றில் ஏதாவது உடைபட்டிருந்து உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டத்தின் கீழ் வேலை எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கிறதா ? ஆம் என்றால் எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது.

கனம் திரு. பூ. கக்கன் : கிரனூறு அணைக்கட்டிற்காக, சின்னயம் பட்டியில் 42,700 ரூபாய் செலவு செய்யலாம் என்றிருக்கிறது. பொண்ணை அணைக்கட்டில் சீர்திருத்தம் செய்ய 95,000 ரூபாய் செலவு செய்யலாம் என்றிருக்கிறது. இது கலெக்டருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவருடைய ரிப்போர்ட் வந்த பிறகு தான் பார்க்கவேண்டும்.

சட்டக் கல்லூரி போலீஸ் நிலையம்

440* கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Law College-க்கு எதிர்ப்புறம் இருந்த போலீஸ் ஸ்டேஷன் எங்கே மாற்றப்பட்டது ?

(இ) அதனால் அரசாங்கத்துக்கு உண்டான செலவு எவ்வளவு ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) சட்டக் கல்லூரி போலீஸ் நிலையம் உயர் நீதி மன்ற வளவிற்குள் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது.

(இ) சட்டக் கல்லூரி போலீஸ் நிலையத்துக்குப் புதுக்கட்டிடம் கட்டுவதற்காகவும் மேற்படி நிலையத்தைச் சேர்ந்த இரு சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு ஜாகை வசதிக்காகவும் ரூ. 77,000 செலவு செய்ய அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது.

(*a*) The Law College Police Station has been shifted to a new building in the High Court compound.

(*b*) An expenditure of Rs. 77,000 has been sanctioned by Government on construction of new buildings to house the Law College Police Station and to provide quarters for two Sub-Inspectors attached to it.